# BSNL ஊழியர சங்கம்

## தமிழ் மாநிலம்

### அகில இந்திய மாநாட்டில் கலந்துக் கொள்வோருக்கு….

அன்பார்ந்த தோழர்களே,

நமது அகில இந்திய மாநாடு 2014, நவம்பர் மாதம் 6ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை கொல்கொத்தாவில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டின் முதல் நாளான 6ஆம் தேதி பேரணியும், பொது அரங்கமும் நடைபெற உள்ளது. இதில் அனைத்து தோழர்களும் பங்கேற்கலாம். முதல் நாள் நிகழ்ச்சிகள் அதிகம் உள்ளதால் மிகச்சரியாக காலை பத்து மணிக்கு மாநாடு துவங்கும். எனவே தோழர்கள் குறித்த நேரத்தில் கலந்துக் கொள்வதை உறுதி செய்ய வேண்டும். இந்த பொது அரங்கில் நமது அகில இந்திய தலைவர்களுடன், CITU சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் A.K.பத்மநாபன் உள்ளிட்ட பலரும் கலந்துக் கொண்டு உரையாற்ற உள்ளனர். அன்று மாலை முதல் பொருளாய்வுக் குழு நடைபெறும். அந்த பொருளாய்வுக் குழுவில் நமது சங்க சட்ட அமைப்பு விதிகள் அனுமதித்துள்ள சார்பாளர்களும், நமது மத்திய செயற்குழுவால் அனுமதிக்கப்பட்டுள்ள பார்வையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என நமது மத்திய சங்கம் மிக தெளிவாக அறிவித்துள்ளது.

அந்த குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையிலான சார்பாளர்களுக்கும்/பார்வையாளர்களுக்கும் மட்டுமே உணவு, தங்குமிடம் ஆகிய வசதிகளை வரவேற்புக் குழு செய்துள்ளது. தற்போது ,மேற்கு வங்க மாநிலத்தில் மாறியுள்ள அரசியல் சூழ்நிலையில் வரவேற்புக்குழுவிற்கென்று ஒரு சில கட்டுபாடுகளும், சிக்கல்களும் உள்ளன. எனவே இந்த முறை நாம் முடிவு எடுத்த படி வரையறுக்கப்பட்டு அறிவுறுத்தப் பட்டுள்ள அடிப்படையிலான சார்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களை மட்டுமே நமது மாவட்ட சங்கங்கள் மாநாட்டின் பொருளாய்வுக் குழு நடைபெறும் நாட்களில் பங்கேற்கும் படியாக ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு மேல் வருபவர்கள், பொது அரங்கிலும், பேரணியிலும் பங்கேற்கலாம். பொருளாய்வுக் குழுவில் பங்கு பெற முடியாத., அவர்களுக்கான உணவு மற்றும் தங்குமிடத்திற்கான ஏற்பாடுகளை செய்வதும் இயலாது என வரவேற்புக் குழு தெரிவித்து உள்ளது. எனவே வரவேற்புக் குழுவிற்கு கஷ்டம் எதுவும் கொடுக்காமல் வரையறுக்கப்பட்ட தோழர்களை தவிர மற்றவர்களுக்கான ஏற்பாடுகளை நமது தோழர்கள், தாங்களாகவே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் எனவும் தோழமையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

கூடிக் கலையும் கும்பமேளாவாக இல்லாமல், விவாதித்து திட்டமிட்டு முடிவெடுத்து BSNLஐ காக்கும் பணியும், BSNL ஊழியர்களை காக்கும் பணியும் நம் முன்னே உள்ளது என உணர்ந்து கட்டுப்பாட்டுடன், கம்பீரத்துடன் கொல்கொத்தா அகில இந்திய மாநாட்டில் பங்கேற்போம். எதிர்காலம் உழைப்பவர்க்கே என்று உணரச் செய்வோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

தேதி:27.10.2014

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்